தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1993, அக்டோபர் 27, புதன்கிழமை

ஐப்பசி 11, ஸ்ரீமுக-திருவள்ளுவர் ஆண்டு—2024.

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''அருவினை என்ப உளவோ கருவியான்
காலம் அறிந்து செயின்''.

தக்க கருவிகளைக் கொண்டு, செய்யும் முறையோடு ஏற்ற காலத்தை அறிந்து எதையும் செய்தால் முடியாத செயல் என்ற ஒன்று உளதோ ?

1. வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 21, திருமதி க. பழனியம்மாள், மாண்புமிகு நிதியமைச்சர்.

21—

சிறுசேமிப்பு திட்ட ஊக்கத் தொகையை மாவட்ட ஆட்சியர் செலவு செய்ய அனுமதி.

*19312— திருமதி க. பழனியம்மாள்:

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சிறு சேமிப்பு திட்டத்தில் மாவட்டங்களுக்கு அளிக்கப் படும் ஊக்கத் தொகையை மாவட்டத்தின் தேவைக்கேற்ப அந்தந்த மாவட்ட ஆட்சியர் செலவு செய்ய அரசு அனுமதி வழங்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா நெடுஞ்செழியன், நிதி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சிறுசேமிப்புத் திட்டத்தின் கீழ் மாவட்டங்களுக்கு அளிக்கப்படும் ஊக்கத் தொகையில் 75% சிறப்பு தன்னிறைவு திட்டங்களுக்காகவும் மீதமுள்ள 25% தொகையினை மாவட்டத்தின் தேவைக்கு ஏற்ப மக்கள் நலத் திட்டங்களை அமுல் செய்யவும் செலவு செய்ய மாவட்ட ஆட்சியாளர்களுக்கு அனுமதி வழங்கப்படுகிறது.

திருமதி க. பழனியம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் நல திட்டங்களுக்காக சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய தொகுதிக்கான கோரிக்கைகளை வைக்கும் பொழுது மாவட்ட ஆட்சியர் அதை ஏற்றுக்கொண்டு, பின்பு துறைக்கு அதற்கான அனுமதியை எழுதிக் கேட்டு செயல் படுத்துவதில் ஏற்படுகின்ற காலதாமதத்தை தவிர்க்கும் பொருட்டு அந்தக் கோரிக்கையை ஏற்றவுடன், அதை 'இன் ஆன்டிசிபேஷன்' செயல்படுத்தி, பின்னர் 'ரேடிபிகேஷன்' வாங்கிக் கொள்கின்ற ஒரு முறைக்கு அரசு அனுமதி அளிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறு சேமிப்பு திட்டத்தின் மூலம் அந்தந்த மாவட்டங்கள் சிறு சேமிப்புத் தொகையைச் சேர்த்து தருவதற்கு குறிப்பிட்ட இலக்கை அவர்கள் நிறைவேற்றுகின்ற வகையில் அவர்களுக்கு மாவட்டவாரியாக ஊக்கத் தொகை வழங்கப்படுகின்றது. அந்த ஊக்கத்தொகையிலே நாம் போட்டிருக்கின்ற நிபந்தனை 75 சதவீதத்தை தன்னிறைவுத் திட்டங்களுக்காகவும், மீதி 25 சதவீதத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் அந்த மாவட்டத்திலே உள்ள பல்வேறு பகுதிகளிலே எவ்வெவற்றுக்கு செலவழிக்கவேண்டுமென்று அவர்கள் எண்ணுகிறார்களோ, அவைகளுக்காகவும் அவர்கள் விருப்பப்படி செலவழிக்கலாம். தன்னிறைவுத் திட்டங்களுக்கும் அந்தந்த மாவட்ட அளவிலே மாவட்ட ஆட்சித் தலைவர் செலவழிக்கலாம். ஒரு குறிப்பிட்ட தொகையை நாங்கள் ஒதுக்கித் தந்ததற்குப் பிறகு, அதை அந்த மாவட்டத்திற்கு செலவழிக்கின்ற உரிமை அவர்களுக்குத் தரப்படுகிறது. குறிப்பிட்ட நிபந்தனையின் அடிப்படையில்.

திருமதி க. பழனியம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த விதியைத் தளர்த்தி, அவர்கள் செலவு செய்த பின்னர், அதற்கு 'ரேடிபிகேஷன்' வாங்கிக் கொள்ள முடியுமா என்பதை அறியவும், அதேபோல் ஒரு சில குறிப்பிட்ட இனங்களுக்கு மட்டும் அதை செலவு செய்யவேண்டுமென்று இல்லாமல், மக்களுடைய முக்கியமான கோரிக்கைகள் வரும் பொழுது அதை எல்லா விதமான இனங்களுக்கும் செலவு செய்கின்ற வகையில் அரசு அனுமதி அளிக்குமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

1993 அக்டோபர் 27]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடைமுறையில் என்ன தன்மை இருக்கிறது என்று என்னிடம் இப்போது விவரம் இல்லை. ஆனால் ஊக்கத்தொகை வழங்கியதற்குப்பிறகு எவ்வளவு ஊக்கத்தொகை தங்களுடைய மாவட்டத்திற்கு கிடைக்கின்றது என்பதை அறிந்ததற்குப் பிறகு அந்த மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அதனை செலவு செய்ய இயலும். ஆகவே தன்னிறைவுத் திட்டங்கள் குறித்து அந்த மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே, எது எதற்கு முக்கியத்துவம் தர வேண்டும் எந்த இடத்தில் எதற்கு செலவழிக்கவேண்டும் என்பதை மாவட்ட ஆட்சித் தலைவர்தான் நன்கு உணர்வார்கள். அதே போன்று 25% தொகையினையும், அவர் விருப்பப்படி செலவழிக்கலாம் என்று கூறுகின்றபொழுது, எது இன்றியமையாத தேவையோ, அதையும் மாவட்ட அளவிலே கண்டறிந்து செய்வதற்கு உரிமை இருக்கிறது. மாவட்ட வளர்ச்சிக் குழுக் கூட்டங்களிலே மாண்புமிகு உறுப்பினர்கள் இது பற்றிக் கருத்துக்கள் எடுத்துத் தெரிவித்தால், அதற்கேற்ப மாவட்ட ஆட்சித் தலைவர் தக்க முறைகளை வகுத்துக் கொண்டு, அவற்றை நடைமுறைப்படுத்த இயலும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. அ. தேவராஜ்.

திரு. அ. தேவராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சிறு சேமிப்பு பற்றி ஊக்கத் தொகை கொடுக்கின்ற போது ஒவ்வொரு மாவட்டமும் எந்த அளவிற்கு வசூல் செய்து கொடுக்கின்றார்களோ, அந்தத் தொகைக்கு ஏற்ற அளவிலே, ஏதாவது பர்சன்டேஜ் வைத்து அந்த அளவிற்குத் தான் அவர்களுக்கு ஊக்கத்தொகை கொடுக்கப்படும் என்று அறிவிக்கப்படுமா ? அப்படி கொடுக்கின்றபோது எங்களுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரையில், 1991-92—க்கும் 1992-93—க்கும் ரூ. 1 கோடி வரும் என்று அரசு அதிகாரிகள் தெரிவித்தார்கள். ஆனால் அதிலே 15 லட்சம் தான் கொடுத்திருக்கிறார்கள் மீதியைக் கொடுப்பதற்கு முடியுமா ? இது குறித்து நான் டி.டி.சி. மீட்டிங்கிலே கேட்கின்ற போது அவர்கள் தகவல் ஒன்றும் தெரிவிக்கவில்லை. ஆகையினால் கொடுப்பதற்கு இயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10—05

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தந்த மாவட்டங்களுக்கு இலக்குகளை நாம் நிர்ணயிக்கிறோம். அந்த இலக்குகளை முடித்துத் தரவேண்டிய பொறுப்பு அந்தந்த மாவட்டத்தினுடைய பாறுப்பு ஆகும். எந்த அளவுக்கு நாம் விதித்த இலக்குகளை

[1993 அக்டோபர் 27

நிறைவேற்றித் தருகிறார்களோ, அந்த அளவுக்கு கணக்கிட்டு ஊக்கத்தொகைகள் தரப்படுகின்றன. உதாரணமாக 1991-92 ஆம் ஆண்டு சிறு சேமிப்புத் துறைக்கு பல்வேறு மாவட்டங்கள் சேர்த்து தந்ததன் விளைவாக அவர்கள் எவ்வளவு சதவீதம் சேர்த்துத் தந்தார்கள் என்பதைக் கணக்கிட்டு கொடுக்கப் படுகின்றது. சென்னையைப் பொறுத்தவரையில் 75 லட்சம் ரூபாயும், செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டத்தைப் பொறுத்த வரையில் 32 லட்சத்து 82 ஆயிரம் ரூபாயும் கோயம்புத்தூர் 60 லட்சம் ரூபாயும், மதுரை 40 லட்சம் ரூபாயும், திண்டுக்கல்-அண்ணா மாவட்டம் 17 லட்சத்து 55 ஆயிரம் ரூபாயும், சேலம் மாவட்டம், 33 லட்சத்து 66 ஆயிரம் ரூபாயும் என்ற வகையில் பெற்றது போல பசும்பொன் வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டங்களும் பெறுகின்றன. திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம் 20 லட்சம் ரூபாயும் 1991-92லே பெறுகின்ற தகுதியை பெற்றிருந்ததனால் அந்த அளவுக்கு தொகை அதற்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது, சென்ற மூன்று ஆண்டு காலமாக நாம் கணக்கிட்டுப் பார்ப்போமேயானால் எல்லாமாவட்டங்களையும் சேர்த்து கிட்டத்தட்ட 19 கோடியே 90 லட்சம் ரூபாய் ஊக்கத் தொகை என்கிற வகையிலே மட்டும் வழங்கப்பட்டிருக் கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வே. பெரியசாமி,

திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறு சேமிப்புத் திட்டத்தில் ஒரு மாவட்டம் முதன் மையான இடத்தைப் பெறுமேயானால் அந்த மாவட்டத்திற்கு சிறப்புத் திட்டமாக அரசு பணத்திலே இருந்து ஒரு தொகையை ஒதுக்கிக் கொடுத்து அதிலே- 75 விழுக்காடு என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லுகிறபோது-தன்னிறைவுத் திட்டத் திற்காக செலவு செய்யப்படும் என்று சொன்னார்கள். அதை அந்தியூர் போன்ற மிக மிகப் பிற்படுத்தப்பட்ட பகுதிகளுக்கு முன்னுரிமை கொடுத்து, அதிலிருந்து 25, 30 விழுக்காடு செலவு செய்யவும்-மாவட்ட ஆட்சித் தலைவர் தங்களுடைய நிலையிலேயே செலவு செய்யும் நிலையில்-அப்படிப்பட்ட பகுதி களுக்கு அதிகமாக ஒதுக்கி செலவு செய்ய வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பிப்பார் களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு இங்கேயிருந்து அந்தி யூருக்கு இவ்வளவு செலவழிக்க வேண்டும் என்று ஆணையிட வழி இல்லை. ஆனால் அந்த மாவட்டத்திலே எந்தெந்தப் பகுதி மிகமிகப் பிற்பட்டதாக இருக்கிறது என்று கருதி அந்த அளவுக்கு செலவு செய்தால் அங்கே நியாயமும் நன்மையும் ஏற்படும் என்று கருதி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள்

1993 அக்டோபர் 27]

செய்யலாம். ஆனால் பொதுவாக குறிப்பிட்டு சொல்லும் போது உதாரணமாக 75 லட்சம் ரூபாயைக் கொடுத்து அதிலே 75 சதவீதத்தை தன்னிறைவுத் திட்டத்திற்கும் மீதி 25 சத வீதத்தை தங்கள் விருப்பம் போல முக்கியமான பணிகளுக்கு அதாவது மணி கூண்டு கட்ட அல்லது, மன மகிழ் மன்றங்கள் வைக்க, அல்லது வண்ண தொலைக்காட்சிப் பெட்டியை குறிப்பிட்ட இடங்களில் வைப்பது போன்ற செயல்களை மாவட்ட ஆட்சித் தலைவர் செய்யலாம். அதை தன்னிறைவுத் திட்டங்களில் கூட செய்யலாம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவது போன்று தன்னிறைவுத் திட்டங் களுக்கு செலவழிப்பதிலே எங்கு குறைவாக இருக்கிறதோ, எங்கே தேவைப்படுகிறதோ அங்கே மாவட்ட ஆட்சித் தலைவர் தங்களுடைய தன்மைக்கு ஏற்ப எடுத்துச் செய்யலாம். அதைத்தான் நான் சொன்னேன். மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்களிலே மாண்புமிகு உறுப்பினர்கள் இந்தக் கருத்துக்களை எடுத்து வைப்பார்களேயானால் அதனை உணர்ந்து மாவட்ட ஆட்சித் தலைவர் அதற்கு ஏற்ப நடந்து கொள்வார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 22 திரு. ஆ. சுப்புரத்தினம் மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர்

22—

இலவச சட்ட உதவித் திட்டங்களுக்கு மத்திய அரசு உதவி

*20135— திரு. ஆ. சுப்புரத்தினம்:

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக் களுக்கு விடையளிப்பாரா:

(அ) மாநில அரசு செயல்படுத்தும் இலவச சட்ட உதவித் திட்டங்களுக்கு மத்திய அரசிடமிருந்து நிதி உதவி கிடைக்கிறதா,

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, சட்டத்துறை அமைச்சர் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு சட்ட உதவி மற்றும் ஆலோசனைக்குழு மத்திய அரசின் மானியத்தை, சட்ட உதவித் திட்டங்களை செயற்படுத்தும் குழு (Committee for Implementing Legal Aid Schemes) மூலமாகப் பெறுகிறது. 1990-91, 1991-92 மற்றும் 992-93 ஆகிய பிரதி ஆண்டிலும் ரூ. 4 இலட்சம்